முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1402

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.08.2023, செவ்வாய்கிழமை

1. அறம்வேலியிட்டு உலகை மீட்க
அன்னதான சக்தியாய் வந்த அரங்கா
வரம்தந்து உலகோரை காக்க
வள்ளலாக மாறி அருளுகின்ற தேசிகா
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 16 ம் நாள், 01.08.2023, செவ்வாய்கிழமை)
ஆசிதந்து உன் பலம் பெற்ற மக்கட்கே
அழியாமை இந்த கலியில் உறுதியாகும்
3. ஆகவே அரங்கன் உன் திருவடி பற்றி
ஆற்றல்மிக்க சடாட்சர தீட்சை ஏற்று
வரங்களாக உன் அன்னதான சேவையை
வழிமொழிந்து உலகோர் செய்து வந்தால் போதும்
4. போதுமப்பா வருகின்ற மக்களுக்கு
புண்ணியபலத்தால் ஆறுமுகன் என் காட்சி
ஆறுதலாய் விரும்புகின்ற இடமெல்லாம்
ஆற்றல்பட இறங்கி அற்புதம் நிகழும்
5. நிகழவே அரங்கன் நீயே கலியின் சிறந்த தவசி
நிலவுலகை காக்கும் மகா யோகி
வல்லமைகொண்டு உன் திருவடி பற்றி நின்றால்
வையகத்தில் அனைவருக்கும் பிறவா பேறு
6. சொல்லவே சடுதி என்சக்தியாக சுருதிபடி
சர்வ சூட்சுமமாய் வந்தடைந்து
அடைந்துமே உலகோரெல்லாம்
அரங்கன் உன்னால் ஞானிகளாவரப்பா

7. தடையற இந்த அற்புதம்
தவராஜன் உன் அவதாரத்தால்
இனிதே நடந்தேறக் கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–